RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22484

OPEN ACCESS

# பழமொழி நானூற்றில் சமுதாய நிலை

ஆ. திவ்யா [அ, *], ஆ. கணேசன் [அ]

[அ] தமிழாய்வுத்துறை, பி.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாமக்கல்-637207, தமிழ்நாடு, இந்தியா

# Social Status in Proverb Four Hundred

A. Divya [a, *], A. Ganesan [a]

[a] Department of Tamil, PGP College of Arts and Science, Namakkal-637207, Tamil Nadu, India

* Corresponding Author: dhivyadivine223@gmail.com

Received: 28-04-2022
Revised: 24-09-2022
Accepted: 07-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

A writer of literature with his profound versatility can create imaginary beings and through them he can reveal the society and culture of his time. By showing so. From the literature created by him, we are able to know about the life of the author, the environment and the cultural norms of the society.

**Keywords:** Society, versatility, Proverb Four Hundred, Cultural

## முன்னுரை

இலக்கியம் படைக்கும் ஒருவன் தன் ஆழ்ந்த பல்துறைப் புலமையின் திறங்கொண்டு கற்பனை மாந்தர்களைப் படைத்து .அவர்கள் வழியாக அவன் காலச் சமுதாயம், பண்பாடு போன்றவற்றை வெளிப்படுத்திக் காட்ட இயலும். அவ்வாறு காட்டுவதன் மூலம். அவன் படைத்த இலக்கியத்தை வைத்துக் கொண்டு அவ்வாசிரியனின் வாழ்ந்த காலம், சூழல், சமுதாயத்தின் பண்பாட்டு நெறிமுறைகள் போன்றவற்றை அறிய முடிகிறது.

## முன்றுறையரையனார்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான பழமொழி நானூற்றை முன்றுறை அரையனார் வெண்பா யாப்பில் புனைந்துள்ளார். மக்கள் நாள் முறை வாழ்வில் இடையறாது பயின்று வரும் பழமொழிகளில் ஏற்புடைய நானூறு பழமொழிகளைத் தேர்ந்து முன்றுறையரையனாரால் இந்நூல் பாடப்பெற்றது. பழமொழி நானூற்றை மக்கள் இந்நூலின் சிறப்பு நோக்கிப் ஷபழமொழி| என்றும் பெருமைப்பட புகழ்ந்துள்ளனர். பழமொழி நானூற்றின் பாடற்பொருண்மைக் கேற்பப் பழமொழியொன்று சுட்டப் பெற்றுள்ளது. உலக வழக்கில் மக்களால் பயன் கொள்ளப் பழமொழிகளை முன்றுறை அரையனார் இலக்கிய வழக்குப் படுத்தியுள்ளார். முதுமொழி என்றும் பழஞ்சொல் என்றும் மூத்தோர் சொல் என்றும் வழங்கப்படுவதைப் பழமொழி என்று அதன் சிறப்புக்கருதிப் பழமொழி நானூறு என்று ஆசிரியரால் பாடப்பெற்றுள்ளது.

## வெளியீட்டு திறன்

தான் கற்ற கல்வியால் விளைந்த அறிவின் முதிர்ச்சியால் தான் தெளிந்துணர்ந்தவற்றைப் பின் வருவாரும் அறிந் தொழுகும் பான்மையால் முன்றுறை அரையனார் பழமொழி நானூற்றை நூலாக்கம் செய்தார் என்பதே சாலும். அறமுணர்த்தும் நெறிசார்ந்து நூல் செய்த சான்றோரெல்லாம் நீதி மொழிகளை மக்கள் மனத்தில் அழுந்தப் பதிக்கும் வகையில் இதனைச் செய்தால் இவ்வகையான அரிய பயன்களைப் பெறலாமென்று உடன்பாட்டு முறையில் (யுககழசஅயவஎந) ஆசையூட்டும் வகையில் கருத்துரைப்பர். அறநெறிப்பட்ட சான்றோர் வழியமைந்து பிறர்க்கு இன்பம் விளைவிக்காவகையில் ஒழுகாதமைந்தால் அருநரகு அடைவர் என அச்சுறுத்தும் வகையில் எதிர் மறை நிலையிலும் (நேபயவஎந) அறமுணர்த்துவர்.

“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப்படும்”

எல்லார்க்கும் ஒழுக்கம் மேன்மையைத் தருமாகையின் உயிரினும் சிறந்ததாக ஒழுக்கம் போற்றிக் கொள்ளப்படும் என்று வள்ளுவர் ஒழுக்க மேம்பாட்டில் ஒவ்வொருவரும் ஆசையுறும் வண்ணம் அறமுணர்த்துவார்.

## குடும்பம்

மனிதன் தன் வாழ்க்கையில் பல்வேறு குழுக்களில் பங்கேற்றுச் செயற்படுகிறான். அவற்றுள் முதன்மையானது குடும்பம் ஆகும். மக்கள் வாழ்க்கையின் பெரும்பகுதி குடும்பத்தில் அமைகிறது. பிறப்பு முதல் இறப்பு வரை இதனோடுதான் அவர்கள் தொடர்ச்சியாகத் தொடர்பு கொள்கின்றனர். சமுதாயம் முற்றிலும் வளர்ச்சியடையக் குடும்பம் ஓர் அடிப்படையாக உள்ளது. குடும்பம் சமுதாயத்தின் அடித்தளமாகக் கருதப்படுகிறது. நம் நாட்டினர் பண்டைக்காலத்தில் குடும்பவாழ்வின் பெருமையினை நன்குணர்ந்திருந்தனர். தலைவன், மனைவி, மக்களோடு வாழ்ந்த குடும்ப வாழ்க்கையைப் பாடாத சங்கப் புலவர்கள் இல்லை எனலாம். ஷநல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பது பாரதிதாசனின் வாக்கு ஆகும். குழந்தைகளைப் பெற்று அவர்களை வளர்ப்பதற்காக ஏற்பட்ட தி;ட்ட வட்டமான தொடர்புகளின்பால் உறவும் அமைந்த குழுவே குடும்பமாகும். அத்தகைய குடும்பத்திலிருந்துதான் சமுதாயத்தின் இயக்கம் ஆரம்பிக்கிறது.

## இல்லறம்

கணவன் மனைவி ஆகிய இருவரும் இல்லில் வாழும் வாழ்க்கை முறைமையை இல்லறம் என்று கூறுகிறோம். இரப்பவர்க்குக் கொடுத்தலும் இன்சொல் கூறுதலும் தனக்குத் தீங்கு செய்தவர்களையும் தமது உறவினரையும் மதித்து பாதுகாத்து வாழ்தலையும் உடைய இல்லறவாழ்வே துறவற வாழ்வைவிட இனிதான வாழ்வு என்று ஏலாதி கூறுகிறது.

'மற்றவர்க்கு உதவி செய்தலும,; விருந்தினருக்கு விருந்தளிக்கும்

குணமும,; போர்க்களத்திலே போர் செய்யும் ஆண்மைத் தன்மையும் சோம்பல்

இல்லாமல் வாழும் வாழ்க்கையையும் இல்லறம்' (பழ-151)

என்று கூறுகிறார் முன்றுறையரையனார். இல்லறம் இல்லாத துறவறத்தை அறநெறிச் சான்றோர்கள் வலியுறுத்தவில்லை. இல்லற வாழ்க்கைதான் துறவிகளுக்கும் பயன்படுகின்ற வாழ்க்கை. இல்லறக் கடமைகளை முடித்தபின் துறவறத்தை மேற்கொள்பவரைத்தான் அவர்கள் சிறப்பானதாகக் கருதினார்கள் (Rasamanikam Pillai, 1967).

ஒரு பழமொழியில் தந்தையின் கடமைப் பற்றிக் கூறுகையில், ஒரு தந்தையானவன் தன் குழந்தையை நல்ல நெறியில் இருக்குமாறு அறிவை உபதேசிக்க வேண்டும். அவ்வாறு தன்னால்

நிறுத்தப்பெற்ற படிவம் தனக்கே தெய்வமாகும். அவ்வாறு குழந்தையைச் செந்நெறியில் நிறுத்தச் செய்தால் தெய்வமான தன்மையை அடையச் செய்யலாம் என்கிறார் (Tamilpiriyan, 2009). இதனை,

“அணங்காகும் தான்செய்த பாவை தனக்கு” (பழ.331)

வீட்டினுள் வறுமை பெரிதாக இருந்தாலும் அதனை வெளிக்காட்டா வகையில் இல்லறத்தார் வாழ வேண்டும். அத்தகைய வாழ்வு உயர்ந்த வாழ்வாக அமையும். புறர் தம்மைப் பார்த்து, பரிதாபம் கொள்ளும் வகையில் வாழுதல் கூடாது என்பதை,

'அகத்தாலழிவு பெரிதாயக் கண்ணும்

புறத்தாற் பொலிவுறல் வேண்டும்'(பழ-329)

பழமொழி நானூறு கூறுகின்றது. இல்லற வாழ்வில் பெண்மைக்குத்தான் முதலிடம் உண்டு. 'இல்லாள்'; என்பது குடும்பத் தலைவியைக் குறிக்கும். ஆனால் இல்லான் என்ற சொல் குடும்பத் தலைவனைக் குறிப்பதில்லை. மனைவியைப் பற்றிய நிலையை குறிப்பிடும் அரையர் கணவன் கூற வரும் முன்னமே அவன் முகக் குறிப்பை கண்டு தேவைகளை அறிய வேண்டும். தன் மனைவி விருந்தினர்களை ஒம்ப வேண்டும். இப்படி செய்து வாழ்ந்தாள் அவர்களைவிட்டு இன்பம் எப்போதும் நீங்காது என்கிறார்.

'சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும் பண்பிற்றம்

இல்லாளே வந்த விருந்தோம்பிச்- செல்வத்

திடரின்றி ஏமாந் திருந்தாரே நாளும்

கடலுள் துலாம் பண்ணி னார்'1

நல்ல மனைவாழ்க்கை வேண்டுமென விரும்புவோர் வேளாண்மை, விருந்தோம்பல், வாளாண்மை, தாளாண்மை ஆகியவற்றைப் பெற்றிருக்க வேண்டும்.கொடிய போரில் வாளாண்மை காட்டி முயற்சியை அழிக்கும் சோம்பல் இல்லாதவராய் வாழ்வோர் வாழ்க்கையே சிறப்புடைத்து. அவ்வாறு வாழாதார் வாழ்க்கை திருத்தமுற்று அமையாது.

'வேளாண்மை செய்து விருந்தோம்பி வெஞ்சமத்து

வாளாண்மை யாலும் வலியராய்த் - தாளாண்மை

தாழ்க்கு மடிகோள் இலராய் வருந்தாதார்

வாழ்க்கை திருந்துதல் இன்று'2

இல்வாழ்வில் பெண்மைக்குரிய பண்புகளையும் இல்லறத்தை இனிது நடத்தும் முறைமையையும், இல்வாழ்வோர் கையாள வேண்டிய பொதுப் பண்புகளையும் குறிப்பிடுகிறார் பழமொழி ஆசிரியர்.

## குலம்

பல உறுப்பினர்களைக் கொண்ட பலகுடும்ப அமைப்புக் குலமாகக் கருதப்படுகிறது. இத்தகைய குலங்கள் தங்களுக்குள் ஒரு தொழிலை குல ஒழுக்கத்தை, மரபைப் பெற்று பேணி வளர்த்தனர். பிறகு மரபோடு கலந்துவிடாமல் பாதுகாத்தனர். பழங்காலந்தொட்டு சாதி உயர்வு தாழ்வு சமூகத்தில் இருந்து வந்ததென்பதைப் பழமொழிகள் காட்டுகின்றன (Santhanam, 1987). மக்கள் அவரவர் சாதிக்கேற்ற படி உயர்ந்த தாழ்ந்த குணங்களையே பெற்றிருப்பர் என்பதைப் பழமொழி நானூறு சுட்டிக் காட்டுகிறது.

'யாரும் குலக்குல வண்ணத்த ராகுப'3

'மறைப்பினும் ஆகாதே தஞ்சாதி மிக்குவிடும்'4

'கொற்சேரித் துன்னூசிவிற்பவர் இல்'5

அந்தணகுலம் அன்று முதல் இன்று வரை உயர்குலமாக மதிக்கப்பட்டது, இதை.

'அந்தணரில் மிக்க பிறப்பில்'6

என்பதன் மூலம் அறிய முடிகிறது. சாதி அடிப்படையில் சமூகத்தில் நிலவி வந்த கருத்துக்களை விளக்கும் (Sekar, 2008).

## கல்வி

மனிதருக்குள் இருக்கும் சிந்தனைஆற்றலை வெளிக்கொணர முன்னோரால் கண்டறியப்பெற்றது. இக்கல்வி மக்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவுகிறது. கல்வி என்பதற்குப் பொதுவாகக் கற்றல் என்பதுடன் இணைத்துப் பொருள் கூறப்படுகிறது.

'பிறப்பு முதல் மனிதனிடம் இயற்கையாக அமைந்து காணப்படாமல்

பின்னர் பெறும் அனுபவங்களும் அவற்றின் விளைவுகளும்

கற்றல் என்பதனுள் அடங்குவனவாகும்.'7

கல்வி அறிவு இல்லாதவனைவிட கற்றிந்தவனே உயர்வானவன் என்று அரிஸ்டாடிலும்மனிதனிடம் பிறவியிலேயே அமைந்திருக்கும் ஆற்றல்களை இயல்பாக இசைவாக படிப்படியாக முன்னேற்றமடையசெய்வதே கல்வியாகும் என்று பெஸ்டாலசியும் ஒருவன் தன்னைத் தானே உணர்ந்துகொள்ள உதவுவதே கல்வி என்று ஆடம்ஸ் என்பாரும் கூறியுள்ளனர்.

## கல்வி கற்கும் முறை

கல்வி கற்க ஆயத்தமாகும் ஒருவன் மனம், மொழி, மெய் அனைத்தையும் மேற்கொண்ட சிந்தனை தொழிலாகிய கல்வியின் வழியில் விடுவது சிறப்புக்குரியதாகக் கருதப்படுகிறது.

'தாயின் மடியில் குழந்தை கற்றுக்கொள்ளாததே இல்லை'8

என்று கூறுகின்றனர் சீன நாட்டார். குழந்தைக்கு முதற் புத்தகமாக இருப்பது தாய் தந்தை நடத்தும் குடும்ப வாழ்க்கை ஆகும். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதை உணர்ந்து 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' என்பதை தெரிந்துக் கொண்டு கல்வி கற்க வேண்டும். கல்வி என்பது முடிவற்ற ஒரு செயலாகும். இதைத் தான் "கல்வி கரையில கற்பவர் நாள் சிலஎன்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சோம்பலி;ன்றி மேன்மேலும் முயன்று கற்க வேண்டும். அஃதாவது, அறிவிற் சிறந்தவர்களுடன் பேசும் போதெல்லாம் தங்கள் உரையாடலில் தடுமாற்றம் ஏற்படுமாயின், அதை எண்ணிச் சோர்வடையக்கூடாது. மனத்தளர்ச்சி கொள்ளாமல் ஒவ்வொரு முறையும் புதிதாகக் கற்க வேண்டும். அவ்வாறு கற்கும் போது, தான் இதுவரை கற்கமால் போனதற்கு மனம் வருந்திப் புதியனவற்றைக் கற்பதையே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். அது பற்றிய சிந்தனையாகவே இருந்து, முயன்று புதியனவற்றைக் கற்றுத் தெளிய வேண்டும். இவ்வாறாக ஒவ்வொரு முறையும் கற்றுத் தெளியும் போது அதுவரை அவற்றையெல்லாம் கற்காது இருந்தோம் என்பதும், புத்தறிவு பெறாதிருந்ததும் தெரியவரும்.

## கல்வி கற்கும் காலம்

கல்வி கற்கும் காலமாக இளமைப் பருவத்தை வரையறுப்பர். இக்காலம் கடப்பின் எச்செயலையும் செய்து முடிப்பதென்பது நடைமுறைப்படுத்த இயலாததொன்று.

இளமைப் பருவத்தில் கற்கும் கல்வியானது பசுமரத்தாணிபோல மனதில் பதியும் என்பதால் கல்வியை இளமையிலேயே கற்க வேண்டும்.

இதனையே பழமொழி நானூற்றில்,

'ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்

போற்று மெனவும் புணருமோ - ஆற்றச்

சுரம்போக்கி உல்கு கொண்டார் இல்லையே இல்லை

மரம் போக்கிக் கூலிகொண்டார்'(பழ-1)

என்கின்றார் முன்றுறையரையனார். குடும்பத்தில் உள்ள குழந்தைகள் கல்வி கற்றிருக்க வேண்டும்; கல்வி கரையற்றது. ஒருவர் பிறந்தது முதல் இறக்கும் வரை கற்றுக் கொண்டு இருக்கவேண்டுமெனப் பொதுவாகக் குறிப்பிட்டுள்ள போதும் இளமையில் கற்க வேண்டுமென்ற கருத்து அனைவருக்கும் ஏற்புடைய ஒன்றாகும். இக்கருத்தை,

'இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்'9

என்ற மணியான கருத்தானது தெளிவுபடுத்துகின்றன.

## கேட்டலின் சிறப்பு

பல நூல்களையும் கற்றல் சிறந்தது. கல்வியுடையார் கூறும் கருத்துக்களைச் செவி கொடுத்துக் கேட்டல் அக்கற்றலினும் நன்று. எனவே ஒருவன் கல்வியைக் கல்லாவிடினும் சான்றோர் கூறும் நல்ல அறங்களைக் கேட்பதே நல்லது என்று வள்ளுவர் கூறுகின்றார்,

'கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்கு

ஒற்கத்தின் ஊற்றாந் துணை'

முதுமையினால் தளர்ச்சி ஏற்பட்டவனுக்கு ஊன்றுகோல் எவ்வாறு உதவியாய் இருக்குமோ அதுபோல் மனத்தளர்ச்சி ஏற்படும்போது கேள்வியறிவு உதவும் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். இதையே நாலடியாரும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

'கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்து ஒழுகின்

அறிவு நாளும் தலைப்படுவர்'

## கல்லாமையால் ஏற்படும் இழிவு

கற்றவரும் கல்லாதவரும் ஒரிடத்திற்குச் செல்லின் கற்றவருக்குச் கிடைக்கும் சிறப்பும் மதிப்பும் கல்லாதவருக்குக் கிடைக்காது. அறிவில் சிறந்தவர்களைச் சமுதாயம் மதிப்பதோடு மட்டுமின்றி அவர்களுக்குத் தேவையான பொருள்களை, ஈந்து பெருமைப்படுத்தும். இருள் தரும் விளக்கை விலை கொடுத்து வாங்குவது எப்படி இல்லையோ அதுபோன்று கல்வியின் பயன் பெறாதவர்களை உலகம் பயன்படுத்தமால் விட்டொழிக்கும் என்பதை,

ஷஷபொருள்கொடுத்துக் கொள்ளா ரிருள்||(பழ-3)

என்னும் பாடலடி விளக்குகின்றது பழமொழி நானூற்றில் கல்வியின் மதிப்பும், கல்வியின் சிறப்பியல்புகளும், வலியுறுத்துவதோடு கல்வி சமயத்தின் அடிப்படையில் திகழ்ந்திருக்கின்றது என்பதும் பெறமுடிகிறது. கல்வி கற்றவர்களுக்குரிய விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கி;ன்றன என்பதும் கல்வி கற்றவர்களுக்குச் சமூகத்தில் மதிப்பு நிலவியிருந்ததற்கான சான்றும் கணக்கிடுகின்றன. கல்லாதவர்களுக்கு மதிப்பின்மை மரபாக வழங்கப்பட்டது.

## பொருளாதாரம்

பொருளாதாரமானது மனித சமுதாயத்தின் அடிப்படை அழகாகத் திகழ்கிறது. இப்பொருளாதாரம் உற்பத்தியின் அடியொற்றியே அமைகின்றது. மனிதன் தமக்குரிய உழைப்பைப் பயன்படுத்தி இயற்கையிலிருந்து பெருகின்றவற்றை பொருளாதாரமாக ஆரம்பகாலச் சமுதாயம் கொண்டிருக்கிறது. மனித சமுதாயம் வரலாற்றுப் போக்கில் பல்வேறு கட்டங்களைத் தாண்டி வளர்ந்துள்ளது. பாரதநாட்டில் வடக்கே வேதம், உபநிடதங்கள், மனு தருமம், சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம் போன்றவனவற்றில் சில குறிப்புகள் பொருளியல் பற்றிக்கிடைக்கின்றன. மேலும் தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் போன்ற இலக்கியங்கள் மூலமும் அறிய முடிகிறது.

## முடிவுரை

ஒவ்வொரு இலக்கியமும் சமுதாய சூழ்நிலைக்கு தகுந்தார் போல கருத்துகளை வெளிப்படுத்திக்கொண்டு இருக்கிறது. மக்கள் மன மாற்றம் என்பது இப்பொழுது வெறும் வெற்றுச்சொற்களினல் பயனற்று போய் கொண்டு இருக்கிறது. பொருளாதாரம், கல்வி, கொடை என்ற அனைத்தும் தனிசிறப்பு வாய்ததாக கருதப்பட்டதையும், அதொடு தொடர்புடைய வாழ்க்கை தான் இலக்கிய வாழ்வியல் என்றும் அறிவுறுத்தப்படுவதாக இக்கட்டுரை அமைகிறது.

## References

Rasamanikam Pillai, (1967) Palamoli Nanuru, Kalaga Veliyedu, Chennai, India

Santhanam, S. (1987) Kalviyin Thathuva Samuga Adipadaikal, Palaniyappa Brothers, Chennai, India

Sekar, D. (2008) Tamil Ilakanankalil Kalviyeyal Sinthanaikal, Sema Pathipagam, Perambalur, India

Tamilpiriyan, (2009) Palamoli Nanuru, Karpagam Puthagalayam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License